**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 9/2024** **Date:10.04.2026.**

**(DW1)- அஜிதா**

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. வாதி தாக்கல் செய்த வழக்கு விபரங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் நான் கிரயம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பக்கம் 4 ல் மேற்படி ஆவண சொத்து பூர்விக குடும்ப வகையாக பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எழுதுவதற்கு விபரங்களை யார் கூறினார்கள் என்றால் எனது கணவரும் அவரது தம்பியும் கூறினர். 1 ஆம் பிரதிவாதி எனது அப்பாவின் அண்ணன் என்றால சரிதான். 1 ஆம் பிரதிவாதிக்கு வாதியை தவிர்த்து மயில்வாகணன், ஜோதிபாஷ் என்ற மகன்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி மயில்வாகணன், ஜோதிபாஷ் அவர்கள் இறக்கும் வரை அவர்களது சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தின் பட்டிகை சொத்து வாய்மொழி பாகப்படி 1 ஆம் பிரதிவாதிக்கு கிடைத்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் குறிப்பிடும் வாய்மொழி பாகம் எந்த தேதியில் ஏற்பட்டது என்பதை எனது எதிருரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் குறிப்பிடும்படி எந்த வாய்மொழிபாகமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதிக்கு 2015 ஆம் வருடம் ஏற்பட்ட விபத்தில் அவர் தனித்து செயல்பட முடியாமல் இருந்தார் என்றால் சரியல்ல. ஜோதிபாஷ் ஆட்டோ ஓட்டுநர் என்றால் சரிதான்.

3. 2015 காலகட்டத்திற்கு பிறகு சுயமாக செயல்படும் நிலமையில் இருந்தார் என்பதை காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் நல்ல நிலமையில் தான் இருந்தார். பட்டிகை சொத்தை எவ்வளவு தொகைக்கு விலை பேசினோம் என்றால் நான் விலை பேசவில்லை எனது கணவர் விலை பேசினார். நான் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதுவதற்கு முன்பு முருகேசபிள்ளைக்கு சொத்து பாத்தியப்பட்டதற்கு ஏதேனும் ஆவணம் பார்த்தேனா என்றால் பார்ப்பதற்கு எந்த ஆவணமும் இல்லை.

4. பட்டிகை சொத்தில் எவ்வளவு செண்ட் சொத்து கிரயம் பெற்றேன் என்றால் 10 ½ செண்ட் கிரயம் பெற்றேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்தின் பரப்பளவு 10.800 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில்

இணைக்கப்பட்டுள்ள வரைபடம் யாரால் தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வரைபடத்தை தயார் செய்ய யார் விபரம் சொல்லிக்கொடுத்தார்கள் என்றால் எனது தம்பி ஜோதிபாஷ் கூறியிருப்பார். எனது நிரூபண வாக்குமூலத்தில் முருகேசபிள்ளை அவரது சொத்துக்களை அவரது வாரிசுகளுக்கு வாய்மொழியாக பிரித்து கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேன், யார் யாருக்கு எவ்வளவு சொத்து கொடுத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாகம் பிரித்து கொடுத்தது போக முருகேசபிள்ளை கைவசம் எவ்வளவு சொத்து வைத்திருந்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. பட்டிகை சொத்து குடியிருப்பு வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் 1 ஆம் பிரதிவாதி இறக்கும் வரை இருந்தார் என்றால் சரிதான். வாதி தற்போது அந்த வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. முருகேசபிள்ளை இவ்வழக்கு தாக்கல் செய்த பின்பு இறந்தார் என்றால் சரியல்ல, அவர் இறந்த பின்புதான் தாக்கல் செய்தார்கள். முருகேசபிள்ளை எப்போது இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கு 2020 ல் இரணியல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அதில் கோரி இருந்த பாகப்பிரிவினை பரிகாரம் வேண்டாம் என்று சீர்திருத்தம் செய்த பின்பு இந்நீதிமன்றத்தில் மாற்றம் செய்யப்பட்டு அ.வ.எண். 9/2024 ஆக எண்ணிட்டு தொடர்ந்து நடைபெற்றுவருகிறது என்றால் சரிதான்.

6. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் முருகேசபிள்ளை இறந்தார் என்றாலும் அவர் இறந்த பின்பு அவரது மகனான வாதி குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பட்டிகை சொத்தின் கதவு எண் என்ன என்றால் நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கதவு எண் கொண்ட வீட்டை தான் நான் கிரயம் பெற்றேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கதவு எண் 2/28 கொண்ட வீடு நெட்டான்கோடு ஊராட்சியில் இல்லை என்றால் சரியல்ல. ஜோதிபாஷ் பட்டிகை சொத்தில் உள்ள விட்டில் வைத்து தான் இறந்தார் என்றால் சரிதான். அவர் இறந்ததை அடுத்து நடந்த விசேச நாள் அன்று இரவு வாதியையும் 1 ஆம் பிரதிவாதியும் தாவா வீட்டில் இருந்து வெளியேற்றினோம் என்றால் சரியல்ல. 1 ஆம் பிரதிவாதியின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அப்பகுதி மக்கள் எனது முயற்சியை தடுத்தார்கள் என்றால் சரியல்ல.

7. தாவா சொத்திற்கான ஆவணத்தை பதிவு செய்யும் சமயத்தில் நடந்த விசயங்கள் சார் பதிவாளர் அலுவலக கேமராவில் பதிவாகியிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பத்திரத்துடன் ஒரு குறுந்தகடு தருவார்கள் என்றாலும் அதை நான் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல, அவ்வாறு

எந்த தகடும் தரவில்லை. முருகேசபிள்ளை கையெழுத்து போடும் பழக்கம் உடையவர் என்றால் சரிதான் ஆனால் அன்றைய தினம் அவர் உடல்நிலை காரணமாக கை நடுக்கம் அதிகமாக இருந்ததால் கைரேகை வைக்க சொன்னார்கள். வா.சா.ஆ.1 ஆவணம் பத்திர பதிவுக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. முருகேசபிள்ளை தாவா பத்திரம் எழுதுவதற்கு விபரம் சொல்லும் நிலமையில் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ. 1 ஆவணம் 1 ஆம் பிரதிவாதி எனது தாயார் மற்றும் சிவகுமார் ஆகியோர் சேர்ந்து வாதிக்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 1 ஆம் பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடும் ஆவணம் பி.வா.சா.ஆ. 1 ஆவணம் என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக 21.04.2026 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**